New
Science Academy
B.M.C. முன்பாக,
JAFFNA.
Special English
Course
விசேட ஆங்கில மொழிப்
போதனை
ஆசிரியர்
த. ந. பஞ்சாட்சரம்
Mon & Thu
3 00 - 5.00 P M

பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

New
Science Academy
B M C. முன்பாக,
JAFFNA.
91 A/L Weekend class
7. 30 - CHE - சண்
8.30 - ZOO - தங்கராஜா
9.30 - PHY - மணியம்
9.30 - CHE-செல்வரஞ்சன்
10.30 } 12 30 } BOT - குணசிலன்
10.30 } 12 30 } MATHS - வெக்டர்
12.30 - PHY
- சோதிலிங்கம்
1 30 - ZOO - தம்பிராஜா

சுடர் 5: பிரமோதூத ஸூ ஆனி மீ 5 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1410 துல்ஹஜ்ஜா பிறை 25 (19 - 06 - 1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:116

# ஸ்ரீ லங்கா அரசு யுத்தப் பிரகடனம்!

## வவுனியாவில் நேரடி மோதல்; புலிகள் பொறுப்பாளர் வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 19

வவுனியாவில் ஸ்ரீலங்கா படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற நேரடி மோதலில் விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட இராணுவப் பொறுப்பாளர் தயாபரன் வீரமரணம் அடைந்தார்.

நேற்று வவுனியா வைரவ புளியங்குளம் (ரயில் நிலையம்) பகுதியில் இடம்பெற்ற சண்டையில் காயமுற்ற அவர், பின்னர் உயிரிழந்தார்.

வவுனியாவில் ஆங்காங்கே தொடர்ந்து சண்டை நடைபெற்று வருவதாகக் கூறப்படுகிறது. (உ)

## இராணுவ முகாமுக்கு வீசப்பட்ட பொதிகளில் ரவைகள், 'சேலைன்'!

யாழ்ப்பாணம், ஜூன் 19

மட்டக்களப்பு மாவட்டம் கும்புறுமூலனையில் அமைந்துள்ள இராணுவ முகாமுக்கு ஹெலிக்கொப்டரில் இருந்து நேற்று வீசப்பட்ட பல பொதிகளை விடுதலைப் புலிகள் கைப்பற்றியிருக்கிறார்கள்.

அப்பொதிகளில் 5 56 ரக ரவைகள், ஐஸ் கட்டிகள் மற்றும் ''சேலைன்'' போத்தல்கள் என்பன இருந்ததாக விடுதலைப் புலிகள் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். (உ)

## கிரான் முகாம் இன்னும் முற்றுகை

யாழ்ப்பாணம், ஜூன் 19

மட்டக்களப்பில் உள்ள கிரான் இராணுவ முகாம் கடந்த ஒரு வார காலமாக முற்றுகையிடப்பட்டிருக்கிறது. இம்முகாம் மீதான தாக்குதல்களையும் விடுதலைப் புலிகள் முடுக்கி விட்டிருக்கிறார்கள்.

விடுதலைப் புலிகளின் முற்றுகையில் சிக்கி இந்த முகாமிற்குள் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் சுமார் நூறு பேர் வரையில் உணவும் தண்ணீருமின்றி இருப்பதாகவும் கூறப்பட்டது.

இதேவேளை —

இந்த இராணுவ முகாம் மீது அடையாளம் தெரியாத வாயு ஒன்றை விடுதலைப் புலிகள் பிரயோகித்ததாக ஸ்ரீலங்கா இராணுவப் பேச்சாளர் ஒருவர் கூறியிருக்கிறார் (உ)

## மாங்குளத்தில் பொம்மர் தாக்குதல்

யாழ்ப்பாணம். ஜூன் 19

முல்லைத்தீவு மாவட்டம் மாங்குளத்தில் நேற்றுக்காலை பொம்மர் தாக்குதல்கள் இடம்பெற்றன.

பொம்மர் குண்டு வீச்சுக்கு இலக்காகி பல கடைகள் முற்றாகச் சேதமாகின.

ஏற்பட்ட சேதங்கள் பற்றிய மேல் விபரங்கள் செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைக்கவில்லை.

## இதுவரை 600 பேர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 19

கடந்த 11 ஆம் திகதி விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா படையினருக்கும் இடையில் ஆரம்பமான யுத்தத்தில் இதுவரை அறுநூறுக்கும் அதிகமானோர் உயிரிழந்திருக்கிறார்கள்.

— இவ்வாறு ஸ்ரீலங்கா இராணுவப் படையின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பொதுமக்கள், அரசுப் படையினர் போராளிகள் ஆகிய மூன்று தரப்பிலுமாக மொத்தம் 600 பேர் வரை உயிரிழந்திருப்பதாக அவர் சொன்னார். (உ)

## திருமலையில் எண்பது தமிழர் பலி!

யாழ்ப்பாணம், ஜூன் 19

திருகோணமலை மாவட்டம் கப்பற்றுறை. சீனக்குடா, கந்தளாய், வெள்ளை மணல் ஆகிய பகுதிகளில் நேற்று ஸ்ரீலங்காப் படையினர் நடத்திய தாக்குதல்களில் 80 இற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் பலியாகியிருக்கின்றனர்.

பீரங்கிக் கப்பல்களிலிருந்தும், பொம்மர்களிலிருந்தும் இப்பகுதிகளில் குண்டுகள் வீசப்பட்டிருக்கின்றன.

படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தினாலும் பலர் உயிரிழந்திருக்கின்றனர். சில தமிழர்கள் வெட்டிக் கொலை செய்யப்பட்டதாகவும் கூறப்பட்டது.

இந்தச் சம்பவங்களினால் அகதிகளாக்கப்பட்ட சுமார் 300 தமிழர்கள் தற்போது தம்பலகாமத்தில் தஞ்சம் புகுந்திருக்கிறார்கள் (உ)

## இராணுவக் குவிப்பைத் தடுக்க கிழக்கில் 2 பாலங்கள் தகர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 19

கிழக்கில் மேலதிகமாக இராணுவத்தைத் தரை மார்க்கமாகக் கொண்டுசென்று குவிக்க எடுக்கப்படும்முயற்சிகளை முறியடிப்பதற்காக இரண்டு முக்கியபாலங்கள் நேற்று குண்டு வைத்துத்தகர்க்கப்பட்டதாக அறியவருகிறது.

ஒட்டமாவடிப் பாலமும் பட்டிருப்புப் பாலமுமே நேற்றுக்காலையில் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டன.

''மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள இராணுவ முகாம்களைப் பலப்படுத்தும் நோக்குடன் இப்பகுதிக்கு ஆயிரக்கணக்கான துருப்புகளைக்கொண்ட மேலதிக படைஅணிகளை தரைமார்க்கமாக அனுப்ப ஸ்ரீலங்கா அரசு முடிவுசெய்திருக்கிறது. இது பற்றி நம்பகரமான செய்திகள் எமக்குக் கிடைத்திருக்கின்றன'' — இப்படி விடுதலைப் புலிகளின் உயர்மட்டப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை —

இரண்டு பாலங்களும் தகர்க்கப்பட்டிருப்

[3ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு பகுதியில் மட்டும் ஒரு இலட்சம் தமிழ் அகதிகள்!

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்றும், நேற்று முன்தினமும் ஸ்ரீலங்கா படையினரால் பரவலாக நடத்தப்பட்ட தாக்குதல்களில் ஒருலட்சத்துக்கும் அதிகமான தமிழ்மக்கள் அகதிகளாகியிருக்கின்றனர்.

வீடுவாசல்களையும், உடைமைகளையும் இழந்து இந்த மக்கள் பாடசாலைகளிலும் கோவில்களிலும் அகதிகளாகத் தஞ்சம் புகுந்திருக்கிறார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கிரான், சந்திவெளி, முறக்கொட்டாஞ்சேனை. சித்தாண்டி, வந்தாறுமூலை, ஏறாவூர், செங்கலடி ஆகிய இடங்களில் பாரிய தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன,

இப்பகுதிகளில் இடம்பெற்ற பொம்மர் குண்டுவீச்சு மற்றும் பீரங்கித் தாக்குதல்களினால் பெருமளவு உடைமைகள் சேதமுற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ]

### பிந்தியசெய்தி

## கோட்டையில் மோதல் வெடித்தது!

யாழ்ப்பாணம்கோட்டைப் பகுதியில் இன்று அதிகாலை 12.45 மணிக்குப் பெரும் மோதல் வெடித்தது.

அடுத்தடுத்து விழுந்து வெடித்த ஷெல்களினால் அதிகாலை யாழ். நகரம் அதிர்ந்தது.

மோதல் வெடித்த சில நிமிடங்களில் கண்ணைப் பறிக்கும் மின்னலுடன் கேட்ட பெரும் அதிர்வினால் மக்கள் திடுக்குற்றனர்.

இச்செய்தி இன்று காலை அச்சுக்குப் போகும் வரை ஷெல், பீரங்கி குண்டுச் சத்தங்களும் மற்றும் வேட்டுச்சத்தங்களும்தொடர்ந்து கேட்டவண்ணம்இருந்தன.

யாழ் நகரப் பகுதியில் நூற்றுக்கணக்கில் விழுந்த ஷெல் குண்டுகளினால் நகரில்அதிகளவில் உயிரிழப்புகளும், உடைமைச் சேதங்களும் ஏற்பட்டிருக்கும் என அஞ்சப்பட்டது.

எனினும் நகருக்குள் பிரவேசிக்க முடியாத அளவுக்கு பெரும் மோதல்கள் நடைபெற்றுக் கொண்டிருந்ததால் சேதங்கள் பற்றிய விவரங்களை உடனடியாகச் சேகரிக்க முடியாதிருந்தது.

மோதல்கள் வெடித்ததை அடுத்து யாழ். நகரப் பகுதியில் குடியிருக்கும் மக்களும் ஆஸ்பத்திரியில் தங்கியிருந்த நோயாளர்களும் விழுந்தடித்துக் கொண்டு பாதுகாப்புத் தேடி வெளியிடங்களை நோக்கி ஓடிக்கொண்டிருந்ததையும் அதிகாலையில் காணமுடிந்தது. [உ]

### முச்சந்தி முரளி



அப்ப இனி இறுதி யுத்தமாய் இருக்குமோ... ?

## தளபதிகளுக்கு அதிக அதிகாரங்கள்

கொழும்பு, ஜூன் 19

விடுதலைப் புலிகளுக்கு எதிராக முழு அளவிலான யுத்தம் ஒன்றை ஸ்ரீலங்கா அரசு நேற்று பிரகடனப்படுத்தியது.

கடந்த சனிக்கிழமை மாலை 6 மணிக்கு அமுலுக்கு வந்த யுத்த நிறுத்தம் உத்தியோகபூர்வமாகக் கைவிடப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கில் கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு வசதியாக இராணுவத்தளபதிகளுக்குஅதிக அதிகாரங்களையும்இலங்கை அரசு வழங்கியிருக்கிறது.

யுத்தம் தொடர்பாக கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வசதியாக தனி இராணுவ அதிகாரிகளை ஸ்ரீலங்கா அரசு நியமித்திருக்கிறது.

நிலைமையை அனுசரித்து கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும். அனைத்து அதிகாரங்களும் இத்தனி அதிகாரிகளுக்கும் வழங்கப்பட்டிருப்பதாக கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை —

ஸ்ரீலங்கா அரசு தங்கள்மீது தேவையற்ற யுத்தம் ஒன்றை திணித்திருப்பதால் யுத்த நிறுத்தத்தை தொடர முடியாத நிலையில் தாங்கள் இருப்பதாக விடுதலைப்புலிகள் அறிவித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

## யுத்த நிறுத்தத்தை தொடர முடியாத நிலை!

### விடுதலைப் புலிகள் நேற்று அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 19

யுத்த நிறுத்தத்துக்கு மதிப்பளித்து விடுதலைப் புலிகள் எதிர்த்தாக்குதல் நிறுத்தியதை பெரும் வாய்ப்பாகப் பயன்படுத்தி ஸ்ரீலங்கா படையினர் தமிழ் பேசும் மக்கள் மீது பெரும் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

படையினரின் இனப்படுகொலையை நாம் பார்த்துக் கொண்டிருக்கமுடியாது நாம் விரும்பாத யுத்தம் எம் மீது திணிக்கப்படுகிறது. அதனால் யுத்த நிறுத்தத்தை தொடர முடியாத நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

-இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைச் செயலகம் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கை விவரம் வருமாறு:-

வடக்கு, கிழக்கு பகுதி மக்கள் மீது கொண்ட அக்கறையினாலேயே சமாதானத்தை விரும்பி யுத்த நிறுத்தம் செய்வதாகப் பறைசாற்றி

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ஆயுதங்களை கைவிட்டால் தான் இனி விடுதலைப் புலிகளுடன் பேச்சு

### நாடாளுமன்றில் ரஞ்சன்

கொழும்பு. ஜூன் 19

தமிழீழ விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டால் மட்டுமே இனி அரசாங்கம் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தும் என்று பாதுகாப்பு துணை அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்தினா நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவசரகால நீடிப்புப்பிரேரணை மீதான விவாதத்தை முடித்து வைத்துப் பேசுகையிலேயே அவர் இப்படிச் சொன்னார்.

அவர் தமது பேச்சில் தெரிவித்தாவது —

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துடனான பேச்சுக்களை இனிமேல் அவர்கள் ஆயுதங்களைக் கைவிட்டால் மாத்திரமே அரசாங்கம் நடத்தும்.

அத்துடன் அரசு விதிக்கும் சகல நிபந்தனைகளையும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் ஏற்கவும் வேண்டும்.

மறைவிடத்தில் இருந்து விடுதலைப்புலிகள் தலைவர் திரு பிரபாகரன் வெளியே வருவாரா? என்று நான் சவால் விடுகின்றேன்.

இன்று நடைபெறும் சண்டை தமிழ் பேசும் மக்களுக்கு எதிரானது அல்ல; பிரிவினைக்கு எதிரானதே இன்றைய யுத்தமாகும் இப்படி அமைச்சர் சொன்னார்.

கடந்த ஒரு வாரகாலத்தில் கடத்தப்பட்ட பாதுகாப்பு மற்றும் பொலீஸ் படையினர் கொல்லப்பட்ட, காணாமற்போன படையினர் பொலீஸார் பற்றிய விபரங்களையும் அமைச்சர் சபையில் சமர்ப்பித்தார்.

ஹமீத்

நீதி அமைச்சர் சாகுல்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## இரசாயன ஆயுதங்கள் பாவிக்கப் படவில்லை!

### விடுதலைப் புலிகள் மறுப்பு

கொழும்பு, ஜூன் 19

கிரான் இராணுவ முகாம் மீது இரசாயன ஆயுதங்கள் பாவிக்கப்பட்டதாக இலங்கை இராணுவம் தெரிவித்த குற்றச்சாட்டை விடுதலைப் புலிகள் இயக்கம் மறுத்துள்ளது.

இரசாயன ஆயுதங்கள் தம்மிடம் கிடையாது என்றும் விடுதலைப் புலிகள் இயக்கம் மறுத்துள்ளது.

இதே வேளை—

இந்த இராணுவ முகாமில் உள்ள இராணுவத்தினருக்கு விமான மூலம் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டதாக இலங்கை இராணுவம் தெரிவித்தது என்று பி பி. சி நேற்றிரவு அறிவித்தது. (உ-எ)

மூன்றாம்
பக்கத்திலும்
முக்கிய செய்திகள்

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (சின்னஞ்சிறு விளம்பரம்)

### விற்பனைக்கு

ஒல்லாந்திலிருந்து இறக்குமதி செய்த (Crimsonglobe) பீட்றூட் விதை விவசாய ஆய்வுகூட அனுமதிபெற்றது. உயர் விளைச்சல் தரவல்லது. 200 கிராம் டின் ரூ 150. 00 தேவைக்கு: பிள்ளையார் 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (3736)

புத்தம் புதிய REMINGTON TYPE-WRITER CEILING FAN சிறிய அலுமாரி கட்டில் மெத்தை FLOOR POLISHER பெரிய அளவிலான பிறேம் போட்ட உலகப்படம் ஆகியன விற்பனைக்குண்டு. 37, மாட்டின் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [3909]

### திருமணஅழைப்பு கார்ட்டுகள்

புதிய அச்சடிக்கும் திருமணக்காட்டுகள் சகலடிசைன்களிலும் விற்பனையாகிறது. உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்ய. ஸ்ரீகாந்த்-புத்தகசாலை மின்சார நிலைய வீதி, பஸ் நிலைய முன்புறம், யாழ்ப்பாணம் (C/5033)

### தேவை

''கண்ணன் காமன்ஸ்'' நிலையத்துக்கு துணிகளை வெட்டவும், தைக்கவும் அனுபவமுள்ள பெண்கள் தேவை நேரில் வரவும். தொடர்பு:- ''கண்ணன் காமன்ஸ்'' K. K. S வீதி, கோண்டாவில் [13508]

### புலமைப் பரிசில் பரீட்சை [ஆண்டு 5]

17 - 6 - 90 ஞாயிறு பரீட்சைக்குத் தோற்றாத மாணவர்கள் 20 - 6 - 90 புதன் பி. ப-4 00 மணிக்குத் தோற்றலாம். பதிவு செய்யாத மாணவர்களும் உடன் பதிவு செய்து தோற்றலாம். ஆண்டு 5 துரித மீட்டல் வகுப்புகள் ஆரம்பமாகியுள்ளன. புதிய கல்வி நிலையம் கெங்காதரன் ஆஸ்பத்திரியடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். [3907]

## வட்டு சிவன் கொடியேற்றம்

வட்டுக்கோட்டை ஜூன்19 வட்டுக்கோட்டை விசாலாட்சி விசுவேஸ்வரர் (வட்டு சிவன்) கொடியேற்றம் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறுகிறது.

தேர்த்திருவிழா 28 ஆம் திகதி வியாழக்கிழமையும் தீர்த்தத் திருவிழா 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் இடம் பெறும். 30 ஆம்திகதி சனிக்கிழமை பூங்காவனத் திருவிழா நடைபெறும் (இ-161)

## OH HOLY SPIRIT

THOU who makes me see everything and shows me the way to reach my ideal Thou who gives me the divine gift to forgive and forget the wrong that is done to me and who are in all instances of my life with me. In this short dialouge I went to thank Thee for everything and confirm once more that I never want to be separated from Thee no matter how great the material desire may be. I want to be with Thee and my loved ones in your Perpetual Glory. Amen

Persons must say this Prayer for 3 consecutive days without stating one's wish. After 3 days your wish is granted, no matter how difficult it may be Promise to Publish the Prayer.

J. J.

(3877)

## உடன் தேவை

**Project Director Cum Engineer**
**Clerks of Work**

வீடமைப்புத் திட்டங்களில் அனுபவமுள்ளவர்களிடமிருந்து மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. முழுவிபரங்களுடனும் அத்தாட்சிப்பத்திரங்களுடனும் தலைவர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்ப்பிரிவு, 73, கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 22 - 06 - 1990க்கு முன் அனுப்பி வைக்கவும்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ்ப்பாணம்.
(சி4752)

## 6 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:
03 - 07 - 1914
உதிர்வு:
25 - 06 - 1984
திதி: ஏகாதசி
19 - 06 - 1990

திருமதி
**விசுவலிங்கம் அன்னபூரணி**

அன்பாலும், பண்பாலும், பாசத்தாலும் நல்வழி காட்டி எவ்வித துன்பங்களும் எம்மை அணுகாமல் வாழவைத்த எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து ஆறு ஆண்டுகள் சென்றாலும் எமது நெஞ்சிருக்கும் வரை உங்கள் நினைவு இருக்கும்.

உங்கள் ஆன்மா சாந்தியடைய உங்கள் குலதெய்வமாகிய பெருமாக்கடவை விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.

கணவன், மக்கள், மருமக்கள்.
பேரப்பிள்ளைகள்.

'அன்னகிரி'
அளவெட்டி தெற்கு. [3880]

## ஓராண்டு கண்ணீர் அஞ்சலி



**செல்வன்சண்முகம் உதயவர்மன்**
(பேபி)

| அன்னையின் மடியில்: | அன்னியனின் பிடியில்: |
|---|---|
| 27 - 02 - 1972 | 19 - 06 - 1989 |

திதி: 07 — 07 — 1990

எங்கள் தவச் செல்வமே, குலவிளக்காக இருந்து வாழ்ந்த எம் செல்வமே, பட்டம் பதவியுடன் பாரினில் வாழ்வேன் என்று எண்ணி கற்பனையில் வாழ்ந்தாயடா. கற்பனைக் கனவுகள் நிறைவேறமுன் நீ பதினேழு வயதினில் எங்கோயடா கணப்பொழுதில் சென்றாய்!

அன்பு மகனே, பாசமுள்ள தம்பியே நினை விழந்து நாம் கலங்கித் தவிக்கின்றோம் சாவினும் உன் நினைவுகள் சாகாதய்யா. ஓராண்டு என்ன நமிருக்கும் காலம் வரை உன் நினைவு எம்மை விட்டு நீங்காதய்யா.

நிகழ்வுகளின் நினைவுகளில்
நிதம் உன் நினைவுகளால் வாடும்:

பாசமுள்ள:
அப்பா, அம்மா, அண்ணாமார்.

73, பலாலி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

''உமா வாசம்''
புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

[3878]

# வவுனியாப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்தோர் ஓமந்தையில்

வவுனியாவில் நடந்த இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் பலரும் ஓமந்தை மகா வித்தியாலயத்தில் தங்கி உள்ளனர். வேறு சிலர் தனிப்பட்ட வீடுகளிலும் தங்கி இருக்கிறார்கள்.

ரம்பைக்குளம், கோவிற்குளம், கூசைப்பிள்ளையார் குளம், குடியிருப்பு, பண்டாரிக் குளம், வேப்பங்காடு, மூன்றுமுறிப்பு, நெளுக்குளம், குருடன்காடு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தாக்குதல்களால் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள்.

அப்பகுதிகளைச் சேர்ந்தவர்கள் அனைவரும் அனேகமாக இடம்பெயர்ந்துள்ளனர்.

சென்ற புதன்கிழமை சென். ஜோசப் இராணுவ முகாமிலிருந்து மட்டும் முந்நூறுக்கும் மேற்பட்ட ஷெல்கள் வவுனியா நகருக்குள் ஏவி விடப்பட்டன.

அதனால் கந்தசாமி கோவிலுக்குள் தங்கியிருந்த பலர் இறந்துவிட்டதாகச் சொல்லப்பட்டது ஆனால் ஊர்ஜிதம் செய்யமுடியவில்லை ஷெல் வீச்சுக்கு இலக்கான பென்னம்பெரிய மரங்கள் இரண்டாக முறிந்து விழுந்து கிடக்கின்றன. வவுனியா நகரில் உள்ள பல கடைகளும் எரிந்தன. வேறு பல கடைகள் உடைந்து சேதமாகின.

இதே வேளையில் ஷெல் அடி தொடங்கியதும் பயத்தினால் ஓடிய பெண்கள் சிலர் தவறி ரம்பைக்குளத்தில் விழுந்ததாகத் தெரியவருகிறது. ஆனால் அவர்களுக்கு என்னாயிற்று என்பது குறித்துத் தெரியவரவில்லை. (37)

## கடை உடைப்பு

சனிக்கிழமை யாழ். நகரப் பகுதியில் நிலவிய பதற்ற நிலையைப் பயன்படுத்தி சிலகடைகள் உடைக்கப்பட்டு பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் கடைகள் உடைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## நினைவஞ்சலி



**திரு. திருமதி அந்தோனிப்பிள்ளை**
(நாகசெட்டி)

| விண்ணக வாழ்வின் 4 ஆம் வருடம் | விண்ணக வாழ்வின் 7 ஆம் வருடம் |
|---|---|
| தோற்றம்;- 15-10-1918 | தோற்றம்:- 04-04-1908 |
| மறைவு:- 19-06-1986 | மறைவு;- 07-04-1983 |

என்றும் எங்கள் உள்ளங்களில் நிலைத்திருக்கும் எம் அன்புப் பெற்றோரை நினைவு கூருகிறோம்.

பிரிவால் துயருறும்!
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பற்றிமாவாசா,
சில்லாலை.

நாகசெட்டிகமம்,
நானாட்டான்.
(3911)

மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகம்

## அதிஷ்ட லாபச் சீட்டிழுப்பு முடிவு

16 - 06 - 1990 அன்று மாலை மானிப்பாய் இந்துக் கல்லூரி நிர்வாக மண்டபத்தில் நடாத்தப் பெற்ற சீட்டிழுப்பு முடிவு பின்வருமாறு.

அதிஷ்ட லாபச் சீட்டு இல. 990

லயன் எஸ். எஸ். தங்கராஜா
செயலாளர்
மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகம்

''மருத மஹால்''
மானிப்பாய். 17 - 06 - 1990 [13509]

**Rate Quotations**

## கட்டிடப் பொருட்கள் வழங்குதல்

### செஞ்சிலுவைச் சங்க வீடமைப்புத் திட்டம் தம்பாலை/பொலிகண்டி/உடுப்பிட்டி

கீழ்காணும் பொருட்களை மேற்படி இடங்களில் வழங்க விலை கோரப்படுகின்றது.

கண்ட கல்லு 6'' — 9''
கண்டாவளை மணல்
நாகர் கோவில் மணல்
தட்டை ஓடு (முதலாம் தரம்)
முகட்டோடு ( '' '' )
4''x2'' வளை (பனை மரம்)
2''x1'' சிலாகை (பனை மரம்)
சீமெந்து ஓட்டைக்கல்லு 16''x8''x4'' (கனம்)

மேற்படி பொருட்கள் விநியோகிக்க விரும்புவோர் விலைப்பட்டியல்களை 23 06-90க்கு முன் எமக்கு அனுப்பி வைக்கும் படி கேட்கப்படுகின்றீர்கள்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ்ப்பிரிவு,
73, கண்டிவீதி,
கண்டிக்குளி,
யாழ்ப்பாணம். [சி-4751]

## நன்றி நவிலல்

**A. E இரத்தினசாமி J. P**
(இளைப்பாறிய பாடசாலை அதிபர்)

எமது குடும்பத் தலைவருக்கு ஏற்பட்ட சுகவீனத்தின் போது இறுதிவரை அவரின் உயிருக்காக போராடிய வைத்திய நிபுணர்கள் சக ஊழியர்களிற்கும், 12 - 6 - 1990 அன்று நடைபெற்ற நல்லடக்க ஆராதனையில் கலந்து கொண்டோர் அனுதாபச்செய்திகள் அனுப்பியோர், சங்கானை அமிதக பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், மற்றும் பல்வேறு பொதுச் சங்கங்களின் பிரதி நிதிகளிற்கும், உதவிகள் பலபுரிந்த ஏனையோரிற்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தனிப்பட்ட முறையில் நன்றி தெரிவிக்க இயலாமைக்கு வருந்துகிறோம்.

குடும்பஅங்கத்தவர்கள்

''Joy Cottage''
Church Road,
Chankanai. (3879)



# பஜாஜ் வாங்கி வெகுமதி பெறுங்கள்



பஜாஜ் வாகனம் ஒன்றை வாங்கும் உங்கள் ஆசைக் கனவை நனவாக்க இதுவே உன்னதமான சந்தர்ப்பம். ஏனெனில், தனித்துவமான பஜாஜ் வெகுமதிப் போட்டியில் கலந்துகொண்டு அற்புதமான பரிசுகளை வெல்லும் அரிய வாய்ப்பினை நீங்கள் பெறுவீர்கள்.

வெகுமதிப் போட்டி நாடளாவிய ரீதியில் கையிருப்பு முடியும் வரை நடத்தப்படும். ஆகவே, உங்கள் பஜாஜ் வாகனத்தை விரைந்து வாங்கிப் போட்டியில் பங்குபற்றுங்கள். பரிசுப் பட்டியலைப் பாருங்கள். எம்மிடமுள்ள புத்தம் புதிய பஜாஜ் வாகன வகைகளைப் பார்க்க வாருங்கள்.



1ம் பரிசு - பஜாஜ் சுப்பர் டிலுக்ஸ் ட்ரைஷோ
2ம் பரிசு - க்வசாக்கி பஜாஜ் கே.பி.K.B 100
ஒவ்வொன்றும் ரூ. 2,500/- பெறுமதியான உதிரிப் பாகங்களைக் கொண்ட 10 ஆறுதல் பரிசுகள்



போட்டி விதிகள்
1. றிச்சர்ட் பீரிஸ் அன்ட் கம்பனி லிமிட்டெட் அதன் உப நிறுவனங்கள் அதன் விளம்பர முகவர்களான தொம்ஸன் லங்கா லிமிட்டெட் ஆகியவற்றின் ஊழியர்களும் அவர்களின் குடும்பத்தினரும் தவிர்ந்த சகல இலங்கைப் பிரஜைகளும் இப் போட்டியில் பங்குபற்றலாம்.
2. கையிருப்பு முடியும் வரை மட்டுமே இப் போட்டி நடத்தப்படும்.
3. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. 4. கடிதத் தொடர்புகளுக்கு இடமில்லை.

**றிச்சர்ட் பீரிஸ் மோட்டோர் கம்பனி லிமிட்**
69, அயிட் பார்க் கோனர், கொழும்பு-2. தொலைபேசி :549480, 422149.

கையிருப்பு உள்ளவரை மட்டுமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### மீண்டும் யுத்தமா?

வடக்கு-கிழக்கில் சனிக்கிழமை மாலை ஆறு மணிக்கு அமுலுக்கு வந்த யுத்த நிறுத்தம் திருப்திகரமாகக் கடைப்பிடிக்கப்படவில்லை. அரசாங்கப்படைகள் ஞாயிற்றுக்கிழமை பல இடங்களில், அனேகமாக எட்டுத் தமிழ் மாவட்டங்களிலும், யுத்த நிறுத்தத்தை மீறித் தாக்குதல்களை நடத்தியதாக விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டினர். அதே போல, விடுதலைப் புலிகள் பல இடங்களில் யுத்த நிறுத்தத்தை மீறி உள்ளதாக அரசு குற்றஞ்சாட்டி உள்ளது.

பாதுகாப்புச் சபை ஞாயிற்றுக்கிழமை இரவு ஜனாதிபதி தலைமையில் கூடி நிலைமையை ஆராய்ந்தது. அந்தந்தப் பிரதேசங்களில் படைகளுக்குப் பொறுப்பாக உள்ள அதிகாரிகள், நிலைமைக்கேற்ப தன்னிச்சையாக முடிவு எடுத்துச் செயற்பட, அதிகாரம் வழங்குவது என்று பாதுகாப்புச் சபை தீர்மானித்தது. திங்கள் மாலை வரை நிலைமையை அவதானித்துவிட்டு இரவில் நடவடிக்கை எடுப்பது பற்றி இறுதி முடிவு செய்யவும் தீர்மானமாகியது.

அனேகமாக அதன் அர்த்தம், யுத்த நிறுத்தத்தை ஒதுக்கி வைத்துவிட்டு, தாக்குதல்களை திங்கள் இரவே அரசபடைகள் ஆரம்பிக்கக் கூடும் என்பதுதான். அதாவது அரசு தனது பலத்தை இராணுவ ரீதியாகக் காண்பிக்கக் கங்கணம் கட்டிவிட்டது என்பதாகும்.

ஆகையால், இதனை வாசகர்கள் படித்துக் கொண்டிருக்கும் போதே சிலவேளை யுத்தம் மீண்டும் தொடங்கி இருக்கவும் கூடும்; அவ்வாறு தமிழ்மக்கள் மீது யுத்தம் தொடுக்கப்பட்டிருக்குமானால் இனிச் செய்யக் கூடியது என்ன?

தமிழ் மக்கள் பல தடவைகள் யுத்தங்களைக் கண்டுவிட்டார்கள். பல அழிவுகளை அனுபவித்தவர்கள் அவர்கள். தாக்குதலில் இருந்து தப்புவதற்காக அடிக்கடி இடம்பெயர்ந்தவர்கள். தாக்குதல்களுக்கு இலக்காகிய உற்றார், உறவினரை இழந்தவர்கள். உடைமைகளைப் பறிகொடுத்தவர்கள். மனநிம்மதியும் அமைதியும் இல்லாமல் வாழ்ந்தவர்கள்.

மீண்டும் அந்த நிலை வந்திருக்கிறது. அழிவு முன்னரை விட அதிகமாகவும் இருக்கக்கூடும். தமிழர்களின் உரிமைகளில் ஒரு சதவீதத்தையாவது வழங்காமல், அரசு, இராணுவ பலத்தால் அடக்கி ஆள எத்தனிக்கும் போது, யுத்தம் தவிர்க்க முடியாதது ஆகிறது. அரசு யுத்தமே என்று தீர்மானித்த பிறகு, அதனைத் தவிர்ப்பது என்றால் சரணாகதி ஒன்றால் தான் முடியும்.

இதுவரை பட்ட அவலமான — அவஸ்தையான அனுபவங்களின் பின்னர் சரணாகதி தேவையா? வாழ்வதெனில் மானம், மரியாதை, மதிப்பு, உரிமைகளுடன் வாழ வேண்டும். இல்லையேல், அடிமை வாழ்க்கையால் எதனைச் சாதிக்கப் போகிறோம்? — காணப்போகிறோம்?

எனவே வருவது வரட்டும் என்று மனதைத் திடப்படுத்துவோம். அவலங்களைத் துணிந்து எதிர்கொள்ள, சகித்துக்கொள்ள எம்மை பழக்கப்படுத்திக் கொள்வோம். வரப் போவதை நினைத்து ஏங்கி மனம் குலையாமல், சமயோசிதமாகச் செயற்படப் பழகுவோம்.

வருந்தி அழைத்தாலும் வாராதன வாரா; பொருந்துவனவும் போ என்றால் போகாவே! தமிழ் மக்களின் துணிவும் தியாகமும் எதிர்காலச் சந்ததியினருக்காவது, அவர்களுக்கு இதுவரை கிடையாத நிம்மதியான வாழ்வு கிடைக்க வழி செய்யட்டும்.

# ஈழ ராஜ்யம் ஒன்றை அமைக்க ஒருபோதும் அனுமதியோம்

## நாடாளுமன்றத்தில் நேற்று மல்லிமாராச்சி

கொழும்பு, ஜூன் 19

ஸ்ரீலங்காவில் ஈழ ராஜ்யம் ஒன்றை அமைக்க ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்.

உணவு, கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. வீரசிங்க மல்லிமாராச்சி நேற்று நாடாளுமன்றத்தில் அவசர காலச் சட்ட நீடிப்புப் பிரேரணை மீது பேசுகையில் இவ்வாறு கூறினார்.

விவாதம் தொடர்ந்து நடைபெற்றது.

மக்கள் ஐக்கிய முன்னணி எம். பி. தினேஷ் குணவர்த்தனா பேசுகையில், ''வடக்கு கிழக்கு மாகாணத்தில் ஸ்திர நிலை ஏற்படுத்தப்படும் வரை யுத்த நிறுத்தம் எதுவும் கடைப்பிடிக்கலாகாது'' என்றார்.

சுதந்திரக் கட்சி எம். பி. ஜயசேன ராஜகருண பேசுகையில், ''அனைவரும் புத்திசாதுரியத்துடன் செயற்பட வேண்டிய காலம் இது'' என்று கூறினார்.

சுதந்திரக் கட்சி எம். பி. ஸ்டான்லி திலகரத்தின பேசுகையில், ''தற்போது இணைக்கப்பட்டுள்ள வடக்கு - கிழக்கு மாகாணத்தை பிரிப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்'' என்று சொன்னார்.

மக்கள் ஐக்கிய முன்னணி எம் பி. திரு. கீதாஞ்சலி குணவர்த்தனா பேசுகையில், ''நாட்டின் இறைமையைப் பாதுகாக்கும் அதே நேரத்தில், இனப்பிரச்சினையையும் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்றார். (ஒ-எ)

## வர்த்தகருக்கு புலிகள் வேண்டுகோள்

வர்த்தகர்கள் பொருள்களைக் கூடுதல் விலையில் விற்கக்கூடாது. ஒரு குடும்பத்துக்கு ஐந்துகிலோ அரிசி, ஐந்துகிலோ மா, இரண்டு கிலோ சீனி, ஒருகிலோ பருப்பு வழங்கப்படவேண்டும். இதற்குக் கூடுதலாக எவருக்கும் விற்பனை செய்யப்படுவது தடைசெய்யப்பட்டுள்ளது. இதனை மீறும் வர்த்தகர்கள் பற்றிய முறைப்பாடுகளை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிக்கு அறியத் தாருங்கள்.

மேற்கண்ட அறிவிப்பு நேற்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியால் யாழ். நகரில் ஒலிபெருக்கி மூலம் விடுக்கப்பட்டது. (இ-51)

## நாளை கொடி

திருநெல்வேலி ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான மகோற்சவம் நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

28 ஆம் திகதி தேரும், 29 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (ஒ)

## காரைநகர்ப் பகுதியில் 60 மீன் வாடிகள் எரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 19

நேற்று முன்தினம் யுத்த நிறுத்தம் அமுல்செய்யப்பட்ட பின்னர் காரைநகர் தெற்கு பகுதியைச் சேர்ந்த 60 மீன் வாடிகள் கடற்படையினரால் கொளுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

அப்பகுதி கிராம சேவையாளர் அப்பகுதி சம்பவங்கள் குறித்து யாழ். அரச அதிபருக்குச் சமர்ப்பித்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்ட விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

16 ஆம் திகதி காலை ஆறு மணி முதல் கடற்படை முகாமில் இருந்து ஷெல் அடிக்கப்பட்டது. அதில் ஒருவர் பலியானார். தொடர்ந்து நடைபெற்ற ஷெல் வீச்சில் பலர் காயமடைந்தனர்.

அப் பகுதியைச் சேர்ந்த 365 குடும்பங்கள் தற்போது இடம் பெயர்ந்துள்ளன- இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பதற்றப் பகுதிகளில் உள்ள பாடசாலைகளைத் திறப்பது குறித்துவிசேட அறிவுறுத்தல்

பதற்றம் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்த பகுதிகளில் உள்ள பாடசாலைகளை நடத்துவது தொடர்பாக பாடசாலை அதிபர்களும், ஆசிரியர்களும் கோட்டக் கல்விப் பணிப்பாளருடன் ஆலோசனை செய்து முடிவு எடுக்குமாறு மாகாணக் கல்விப்பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் கேட்டுள்ளார்.

பதற்றம் காரணமாக மக்கள் வெளியேறியதை அடுத்து பலாலி, காங்கேசன்துறை, மாவிட்டபுரம், மயிலிட்டிப் பகுதிப் பாடசாலைகள் நேற்று இயங்கவில்லை.

அதைத் தொடர்ந்தே கல்விப் பணிப்பாளர் இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

பாடசாலைக்குச் செல்ல முடியாத நிலையிருப்பின் தத்தமது பகுதி கோட்டக்கல்வி அலுவலகத்துக்கு சமுகம் தருமாறு அதிபர், ஆசிரியர்கள் கேட்கப்பட்டுள்ளனர். (உ-3)

## வெளியூர் தொலைபேசி; சீரடையும் நிலை இல்லை!

யாழ்ப்பாணம், ஜூன் 19

வெளி மாவட்டங்களுக்கான தொலைபேசிச் சேவை இப்போதைக்குச் சீரடையும் சாத்திக்கூறு இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

மடுகந்தை தொலைத் தொடர்புக் கோபுரத்தில் பழுது ஏற்பட்டதாலேயே தொலைத்தொடர்பு சேவை சீர்குலைந்தது என்றும் கூறப்பட்டது.

ஆனால் இந்தக் கோபுரம் உண்மையில் சேதமடைந்ததா? அல்லது வேண்டுமென்று மேற்கொள்ளப்பட்ட சதிவேலையால் அது செயல் இழந்ததா? என்பது தெரியவில்லை என்று சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் சந்தேகம் தெரிவித்தார். [உ-3]

## ஈழ அகதிகள் 24 பேர் ராமேஸ்வரத்தில் தஞ்சம்

கொழும்பு, ஜூன் 19

இலங்கைத் தமிழ் அகதிகள் 24 பேர் 'பிளாஸ்டிக்' படகுகளில் இராமேஸ்வரம் போய்த் தஞ்சமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது வடக்கு-கிழக்கில் இடம் பெற்றுவரும் சண்டை காரணமாக இவர்கள் இராமேஸ்வரம் சென்றதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன. (ஒ எ)

## குதிக்கால்களை வெட்டி 4 பேரைச் சுட்டுக் கொன்றனர்

### காரைநகரில் சனியன்று நடந்தது

கடந்த சனிக்கிழமை காரைநகர் தெற்குப் பகுதியில் நால்வரைச் சுட்டுக் கொன்ற கடற்படையினர் அவர்கள் குதிக்கால்களையும் வெட்டியுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை காலை ஆறு மணியளவில் காரைநகர் கடற்படை முகாமிலிருந்து தொடர்ந்து ஷெல் தாக்குதல்கள் இடம் பெற்றன. இதனால் அப்பகுதி மக்கள் தமது வீடுகளில் இருந்து அவசர அவசரமாக வெளியேறினர்.

தாக்குதல் ஓய்ந்த பின் காரைநகர் தெற்குப் பகுதியைச் சேர்ந்த பொது மக்கள் பெறுமதி மிக்க தமது உடைமைகளை எடுக்க தமது வீடுகளுக்குத் திரும்பிச் சென்றனர்.

இப்படித் திரும்பியவர்களில் ஒரு பாடசாலை மாணவனும் இரு பெண்களும் மற்றொரு ஆணும் சுடப்பட்டு குதிக்கால்வெட்டப்பட்ட நிலையில் சடலமாக பின்னர் மீட்கப்பட்டனர். (உ-3)

## பிரேமா தலைமையில் நடந்த அவசர பாதுகாப்பு கூட்டம்

கொழும்பு, ஜூன் 19

பாதுகாப்புச் சபையின் அவசரக் கூட்டம் ஒன்று கடந்த ஞாயிறு இரவு ஜனாதிபதி பிரேமதாஸா தலைமையில் நடைபெற்றது.

முப்படைகளின் தளபதிகள் பொலீஸ்மா அதிபர் உட்பட அமைச்சர்கள் ரஞ்சன் விஜேரத்னா, சாகுல் ஹமீது ஆகியோரும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் நிலவும் நெருக்கடிகளைச் சமாளிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அந்தந்தப் பகுதிக்கு பொறுப்பான வெளிக்கள தளபதிகள் நிலைமையைப் பொறுத்து மேற்கொள்ள அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. [இ-எ]

## இராணுவக் குவிப்பைத் தடுக்க---

பதால் மட்டக்களப்பு, அம்பாறைப் பகுதி முகாம்களில் உள்ள இராணுவச் சிப்பாய்களுக்கு உணவு முதலான அத்தியாவசியப் பொருள்களும், காயமடைந்தவர்களுக்குச் சிகிச்சை அளிக்க மருந்து வகைகளும் தரை [illegible] இந்திய வானொலி நேற்று அறிவித்தது. [இ-எ]

## யுத்த நிறுத்தத்தை - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட ஸ்ரீலங்கா அரசு செய்துகொண்டயுத்தநிறுத்த உடன்பாட்டை துளியளவு கூட மதியாது தொடர்ந்தும் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் பெரும் தாக்குதலை நடத்தி வருகிறது.

அறிவித்தபடி விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிப்பதை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, பொதுமக்கள் மீது குண்டு வீச்சு விமானத் தாக்குதல்களை நிகழ்த்தியும், பல கிராமங்களுக்குள் புகுந்து தாக்கியும் ஏராளமான தமிழ்பேசும் மக்களைக் கொன்று குவித்ததுடன், பெருந்தொகையான வீடுகளை அழித்தும், ஸ்ரீலங்கா ஆயுதப் படையினர் லட்சக்கணக்கானோரை அகதிகளாக்கியுள்ளனர்

ஸ்ரீலங்கா இராணுவம் பல இடங்களில் கிராமங்களுக்குள் புகுந்து தமிழ்பேசும் மக்களை வெட்டிக் கொன்றும், பெண்களைப் பாலியல் வன்முறைகளுக்குள்ளாக்கியும் வருகிறது. யுத்தம் நடந்த 6 நாட்களைவிட யுத்தநிறுத்தம் அறிவிக்கப்பட்ட தன் பின்னரே கூடுதலான தமிழ் பேசும் மக்கள் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றனர்.

### ஒரு லட்சத்துக்கும் அதிகமான அகதிகள்

யுத்த நிறுத்தத்தின் பின் மட்டக்களப்பு மாவட்டத்தில் கிரான், சந்திவெளி, மொறக்கொட்டாஞ்சேனை, சித்தாண்டி, வந்தாறுமூலை, ஏறாவூர், செங்கலடி ஆகிய பகுதிகளில் சிங்களப் படையினர் நடத்திய தாக்குதலில் நேற்று (ஞாயிறு) மட்டும் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான பொதுமக்கள் அகதிகளாகி பாடசாலைகளிலும், கோவில்களிலும் தஞ்சம் புகுந்துள்ளனர்

நேற்று (திங்கள்) காலையிலும் தொடர்ந்து பல பகுதிகளில் ஸ்ரீலங்கா படையினர் விமானத் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர். நேரடியாக தமது தாக்குதல்களின் மூலம் விடுதலைப் புலிகளைப் பணிய வைக்க முடியாது என்பதைப் புரிந்து கொண்ட ஸ்ரீலங்கா படையினர் அப்பாவிப் பொதுமக்கள் மீது கொடூரமான முறையில் பெரும் தாக்குதலை நடத்தி அதன்மூலம் விடுதலைப் புலிகள் மீது அழுத்தத்தைப் போடலாம் என்று எண்ணிச் செயற்பட்டு வருகின்றனர்.

### யுத்தம் திணிக்கப்படுகிறது

யுத்தநிறுத்தத்தை பயன்படுத்தி ஸ்ரீலங்கா படையினர் மேற்கொண்டுவரும் இனப்படுகொலையை நாம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. நாம் விரும்பாத யுத்தம் எம் மீது திணிக்கப்படுகிறது அதனால் யுத்த நிறுத்தத்தைத் தொடர முடியாத நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

ஸ்ரீலங்கா படையினரின் இந்தத் தாக்குதல்களிலிருந்து தமிழ் பேசும் மக்கள் காப்பாற்றப்பட வேண்டுமானால் தாக்குதலைத் தொடுத்துக் கொண்டிருக்கும் ஸ்ரீலங்கா படையினருக்கு எதிராக தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து போராடியே தீரவேண்டும்.

இது ஸ்ரீலங்கா அரசு தமிழ் பேசும் மக்கள் மீது தொடுத்திருக்கும் போராகும். ஸ்ரீலங்காப் படையினரை நேரடியாகச் சந்திக்கத் தயாராகி அவர்களின் முகாம்களின் முன்றலில் நிற்கும் விடுதலைப் புலிகளை விட்டுவிட்டு, ஸ்ரீலங்கா படையினர் பொதுமக்கள் வாழும் பகுதிகளில் பெரும் தாக்குதல்களை நடத்தி வருவதிலிருந்து ஸ்ரீலங்கா அரசின் எண்ணத்தை தமிழ் பேசும் மக்கள் நன்கு புரிந்துகொண்டுள்ளனர்.

ஸ்ரீலங்கா படையினரது தாக்குதலையும் இந்தியப் படையினரது தாக்குதலையும் எதிர்கொண்டு இதுவரை ஏறத்தாழ 1,500 விடுதலைப் புலி வீரர்கள் களப்பலியாகியுள்ளனர். அதேகாலத்தில் போராட்டத்தில் எதுவித தொடர்புமற்ற பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

### தவிர்க்க முடியாதது

நேரடியாகப் போராடினாலென்ன, போராட்டத்துக்கு வெளியே இருந்து ஒத்துழைத்தாலென்ன, போராட்டத்திலிருந்து முற்றாக விலகி ஒதுங்கி நின்றாலென்ன தமிழ் பேசும் மக்கள் ஸ்ரீலங்கா படையினரின் இனவெறித் தாக்குதல்களுக்கு ஆளாவதிலிருந்து தவிர்க்க முடியாது என்பதையே கடந்த காலச் சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

தமிழ்பேசும் மக்கள் மீது தாக்குதலைத் தொடுத்த சிங்கள, இந்தியப் படைகளை எதிர்கொண்ட எமது வீரர்கள் ஏறத்தாழ 5,000 எதிர்ப் படையினரை அழித்துள்ளனர். இதில் எமது வீரர்கள் 1 500 பேர் வரை வீரமரணமடைந்தனர். எதிர்ப் படையினரில் மூவரை வீழ்த்துவதற்கு ஒருவர் என்ற கணக்கில் எமது வீரர்கள் உயிர்த்தியாகம் செய்துள்ளனர்.

போராட்டத்திலிருந்து ஒதுங்கியிருந்தபோதிலும் அநியாயமாக எவ்வித பயனுமற்ற முறையில் கொல்லப்பட்ட இளைஞர்கள் அனைவரும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இணைந்து போராடியிருந்தால் எதிர்ப்புக்களைப் பெருமளவில் ஒடுக்கியிருக்கலாம். அநியாயமாகக் கொல்லப்பட்ட இளைஞர்களின் எண்ணிக்கையும் குறைத்திருக்கலாம்.

எனவே இனி மேலாயினும் தொடர்ந்து ஸ்ரீலங்காப் படையினரால் ஏற்பட்டுவரும் பேரழிவைத் தடுப்பதற்கு, தமிழீழ இளைஞர்களுக்கு உள்ள ஒரே வழி எதிரிகளை எதிர்த்து விடுதலைப் போரை நடத்திவரும் எம்முடன் ஒன்றிணைந்து போராடுவதே.

எனவே, தமிழ்பேசும் மக்கள் மீது திணிக்கப்பட்டிருக்கும் போரை எதிர்கொள்வதற்கு தமிழீழ மக்கள் அனைவரும் எம்மோடு இணைந்து விடுதலைப் போராட்டத்திற்கு தங்களாலான அனைத்துப் பங்களிப்புகளையும் செய்ய முன்வரவேண்டும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ ]

## தேசிய பாதுகாப்பு நிதிக்கு எம். பிக்களின் சம்பளம்

தேசிய பாதுகாப்பு நிதிக்கு அரசு எம்.பிக்கள் தங்கள் ஒரு மாதச் சம்பளத்தை நன்கொடையாக வழங்குவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இப்படி அமைச்சர் விஜேரத்தினா நேற்றுநாடாளுமன்றத்தில் தெரிவித்தார். [ஒ-எ]

## அவசர காலச்சட்டம் நீடிப்பு: பிரேரணை நிறைவேறியது ஈரோஸ் எம்.பிக்கள் இல்லை;

கொழும்பு, ஜூன் 19

அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணை நேற்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

120 எம். பிக்கள் ஆதரித்து வாக்களித்தனர். திரு. வாசுதேவநாணயக்கரா மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம் பிக்களும் தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பிக்கள் இருவரும் அரசுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

சுதந்திரக்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி ஐக்கிய சோஷலிய அணி எம்.பிகள்க் சபையில் சமூகமளித்து இருந்தும் நடுநிலைமை வகித்தனர்.

ஈரோஸ் எம் பிக்கள் சபைக்குச் சமுகம் அளிக்கவில்லை. (ஒ-எ)

## கிளிநொச்சி அகதிகள்

கிளிநொச்சியில் இடம் பெற்ற தாக்குதல் சம்பவங்களை அடுத்து பொதுமக்கள் பலர் இடம் பெயர்ந்துள்ளனர்.

பலர் கால்நடையாக பரந்தன் பூநகரி வழியாக சாவகச்சேரி பளைப் பகுதிகளுக்கு வந்துள்ளனர். (இ - 117)

## செய்திச் சரம்

### பூநகரியில் நேற்றும் ஹெலிசூடு

பூநகரி, ஜூன் 19

பூநகரி 4ஆம் கட்டைப்பகுதியில் நேற்றுக்காலை 10 மணியளவில் ஹெலி ஒன்று தாழப் பறந்து துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டது.

இதனால் இப்பகுதி மக்கள் பதற்றம் அடைந்தனர். வேறு அசம்பாவிதங்கள் இடம்பெறவில்லை. [ஒ]

### 6மணிக்குப்பின் பஸ் இல்லை

யாழ்ப்பாணம், ஜூன் 19

யாழ். குடாநாட்டுக்குள் சேவையில் ஈடுபடும் சகல பஸ் சேவைகளும் மாலை ஆறு மணியுடன் நிறுத்தப்படும் என வடபிராந்திய போக்குவரத்துச்சபை அறிவித்துள்ளது. (இ-10)

### பவளவிழா நிகழ்ச்சிகள் இன்றும் நாளையும்

சுன்னாகம் ஜூன் 19

இராமநாதன் மகளிர் கல்லூரி பவளவிழா நிகழ்ச்சித் தொடரில் இம்மாதம் 17ஆம் திகதி நிகழ இருந்த பரிசளிப்பு விழாவும் கலைநிகழ்ச்சிகளும் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறுகின்றன

அதே போல இம்மாதம் 16ஆம் திகதி நடைபெற இருந்த பவள விழா மலர் வெளியீடும் பழைய மாணவர் ஒன்று கூடலும் நாளை புதன் கிழமை (20 ஆம் திகதி) நடைபெற உள்ளது

நாட்டுச் சூழ்நிலை காரணமாக முதலாம் நாள் தவிர்ந்த பவளவிழா நிகழ்ச்சிகளை உரிய தினங்களில் கொண்டாட முடியவில்லை என அறிவிக்கப்பட்டது. (அ)

### இன்றைய மோதல்கள்

மிலான், ஜூன் 18

இன்று நடைபெறவுள்ள உலக கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகள் வருமாறு:

'ஏ' பிரிவில்

இத்தாலி எதிர் செக்கோஸ்லேவேகியா. (இடம்: ரோம்) ஆஸ்திரியா எதிர் அமெரிக்கா. (இடம்: புளோரன்ஸ்)

'டி' பிரிவில்

மேற்கு ஜேர்மனி எதிர் கொலம்பியா.(இடம்:மிலான்) யூகோஸ்லேவியா எதிர் ஐக்கிய அரபு எமிரேற்சு (இடம்: பொலோக்னா) (இ எ)

### உலகக்கிண்ண உதைபந்தாட்ட முடிவுகள்

மிலான் ஜூன் 19

கடந்த ஞாயிறு நடந்த உலக கிண்ண உதைபந்தாட்டப் போட்டி முடிவுகள் வருமாறு;

'இ' பிரிவில் பெல்ஜியம் 3-1 கோல்களால் உருகுவேயைத் தோற்கடித்தது.

ஸ்பெயின் 3-1 கோல்களால் தென் கொரியாவைத் தோற்கடித்தது.

'எப்' பிரிவில் அயர்லாந்து அணிக்கும் எகிப்து அணிக்கும் இடையேயான மோதல் வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்தது. இரு அணிகளும் ஒரு கோலும் போடவில்லை (இ-எ)

### மகோற்சவம்

யாழ்ப்பாணம் ஜூன் 19

வட்டுக்கோட்டை கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை புதன் கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

இம்மாதம் 28 ஆம், 29 ஆம் திகதிகளில் முறையே தேர் தீர்த்த உற்சவங்கள் நடைபெறவுள்ளன. [இ-7]

## ஆயுதங்களைக் கைவிட்டால்--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஹமீத் பேசுகையில் சொன்னதாவது:—

விடுதலைப்புலிகள் ஜனநாயக வழிக்குத் திரும்பச் செய்வதே ஜனாதிபதியின் முக்கிய நோக்கம். இந்த நம்பிக்கையுடன் தான் நான் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினேன்.

பேச்சுக்கள் நடந்து கொண்டிருக்கும் போது ஏன் சண்டையில் ஈடுபடுகின்றீர்கள் என்று நான் கேட்ட போது விடுதலைப்புலிகள் பிரதிநிதிகள் எந்த வித பதிலையும் தெரிவிக்கவில்லை — என்றார்.

### அனுரா

பதில் எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா பேசுகையில் சொன்னதாவது:—

வடக்கு - கிழக்குப் பகுதியில் ஆயுதப் படையினர் ஆரம்பித்துள்ள யுத்தத்துக்கு ஆதரவளிக்கும் முகமாகவே அவசர காலச் சட்டத்தை நீடிக்க சுதந்திரக் கட்சி ஆதரவளித்தது. நாடுதுண்டாடப்படுவதை எதிர்த்து இந்த யுத்தம் நடத்தப்படுகிறது.

தமிழர்களுக்கு நாம் தீங்கு இழைக்கக் கூடாது ஈழம் பெறுவதே விடுதலைப்புலிகளின் முழு நோக்கமாகும்.

### லலித்

கல்வி அமைச்சர் லலித் அத்லத்முதலி சொன்னதாவது,—

பாஸிஸவாதத்துக்கு எதிரான யுத்தமே வடக்கு கிழக்கில் நடைபெறுகிறது. இது தமிழருக்கு எதிரானதல்ல.

தமிழரின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக விடுதலைப் புலிகள் யுத்தத்தில் ஈடுபடவில்லை; சொந்த நலனுக்காகவே அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தோல்வியடையச் செய்யமுடியாது என்று சிலர் நினைக்கிறார்கள்.

வடமராட்சி நடவடிக்கையில் விடுதலைப் புலிகள் தோல்வி அடைந்ததை நாம் கண்டோம். தற்போது கூட விடுதலைப்புலிகள் இயக்கத்தினர் பின் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்-என்று சொன்னார். (அ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதியதோர் சேவை!
★ குறுகிய காலத்தில் ★
தரமான கலர் பிலிம்
கழுவுவதற்கு
Cosmas Marketing Services
337, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்,

# உதயன்

19 - 06 - 1990 செவ்வாய்க்கிழமை

வெளிநாட்டில் உள்ள உங்கள்
உறவினர்களுக்கு
அவசரமாக, விரைவாக, பாதுகாப்பாக
✶ கடிதங்கள் ✶ பார்சல்கள்
★ தஸ்தாவேஜுக்கள் அனுப்ப
DHL WORLDWIDE EXPRESS
337, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## பஸ் கட்டணம் உயர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 19

டீசல் தட்டுப்பாட்டைத் தொடர்ந்து தனியார் பஸ்கட்டணம் ஐம்பது சதத்தால் நேற்றுமுதல் அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை டீசல் தட்டுப்பாட்டை அடுத்து பலபகுதிகளில் தனியார் பஸ்சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

இதனால் சைக்கிள்களிலும் கால்நடையாகவும், வண்டில்களிலும் மக்கள் பயணம் செய்வதைக் காணக்கூடியதாக இருக்கிறது. [உ-3]

# மரண அறிவித்தல்கள்

## ஆறுமுகம் கனகசபை
(வைத்தியர் பெருமாள்பிள்ளை)

பெருநாக இல்லம், தாவடி வடக்கு, கொக்குவிலைச் சேர்ந்த ஆறுமுகம் கனகசபை காலமானார்.

இவர் நாகம்மாவின் அன்புக் கணவரும், சரோஜினி தேவி, காலம்சென்ற கமலேஸ்வரி, பத்மாவதி (white & Black Medicals 44/4. Dam Street, Colombo - 12) சுமலாதேவி ஆகியோரின் தந்தையும், அரியரட்னம், ஜெகநாகலிங்கம் ஆகியோரின் மாமனாரும், நளாயினி, சசீதரன், சேகரன், பகீரதன், பகீரதி ஆகியோரின் அன்புப் பேரனும், காலம் சென்ற ஆறுமுகம் - பொன்னம்பலம், (பிரபல வைத்தியர்) கனகசபை ஆகியோரின் அன்புச் சகோதரரும், கனகம்மாவின் மைத்துனரும், செல்லையா சிவசுப்பிரமணியத்தின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் தாவடி மயானத்தில் 18 - 06 - 90 திங்கட்கிழமை தகனம் செய்யப்பட்டதென்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல் :
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், குடும்பத்தினர்.

பெருநாக இல்லம்,
தாவடி வடக்கு,
கொக்குவில்.
[13452]

## முத்துத்தம்பி கருணானந்தன்
(இளைப்பாறிய பொதுச் சுகாதாரப் பரிசோதகர் வட்டுக்கோட்டை]

அன்னார் காலம் சென்ற முத்துத்தம்பி சின்னத்தங்கச்சியின் மகனும், வசந்தாதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சுட்டுடை மலாயன் பென்சனியர் கனகரத்தினம், மங்கையற்கரசி அவர்களின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19-6-90 [இன்று] செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகிறேன்.

தகவல்:
க. இரங்கநாதன்
[பொது சுகாதாரப்பரிசோதகர் மலேரியாத் தடைப்பகுதி]

சாந்தி இல்லம்,
கட்டுடை மானிப்பாய்.
[13513]

## மயில்வாகனம் சிறீஸ்வரன்

மயில்வாகனம், செல்வநாயகி ஆகியோரின் புதல்வன், சிறீஸ்வரன் ஜேர்மனியில் அகால மரணமாகிவிட்டார். இவர் இராஜசுலோசனா, சிவகுமாரன் (கொலண்ட்), இராகினி சிறீஸ்கந்தராஜா (மஸ்கன்ஸ்), வதனபாஸ்கரன் (ஜேர்மனி), ஜெயந்தினி குணதீஸ்வரன் (Travel Agent), சுரேஸ்கரன், சுகந்தினி, யாழினி ஆகியோரின் அன்புச் சகோதரனும், மகேஸ்வரி சிவசுப்பிரமணியம், விஸ்வலிங்கம், காலஞ்சென்ற அருளம்நாயகம், சந்திரன் ஆகியோரின் மருமகனும், தங்கம்மா தம்பையா ஆகியோரின் அன்புப் பேரனும், பிரதீபன், குணதீபன் ஆகியோரின் அருமை மாமனாரும், சிவபாக்கியம், ஜவகர்லால் (ஆசிரியர் வட்டுக்கோட்டை), இராஜலட்சுமி, தனலட்சுமி சுப்பிரமணியம், மீனாட்சி வேலுப்பிள்ளை, பரிபூரணம் சின்னத்துரை, ஆகியோரின் பெறாமகனும், இராஜேந்திரன், மகேந்திரன், இந்திராணி குணசிங்கம் (ஜெர்மனி), யோகராணி, தர்ஷன், அஜித், சர்மிலன், ஆகியோரின் மைத்துனரும், தாமரைச்செல்வி, சுமித்திரா, கௌரிகாந்தன் (டென்மார்க்), பாலசங்கர் (சுவிஸ்), லதா, பாமினி, அஜந்தினி சுந்தரலிங்கம் (அமெரிக்கா), சிறீபதி வதனி (கனடா), பாலேந்திரன் ரூபி [ஜெர்மனி], மதிவதனி [கனடா], ஞானரூபி, தனலட்சுமி தங்கராஜா, பாலகிருஸ்ணன் பாக்கியம், பூபதி, திலகவதி, கிருஸ்ணவேணி, ஆகியோரின் ஒன்று விட்ட சகோதரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 18 6 90 நேற்று ஜேர்மனியில் நடைபெற்றது.

தகவல்:
குடும்பத்தினர்

நவாலி தெற்கு,
மானிப்பாய்.
[13511]

## திருமதி பாக்கியம் சின்னத்தம்பி

மனுவில் வீதி, நுணாவில் கிழக்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி பாக்கியம் சின்னத்தம்பி 16-06-1990 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதி சின்னத்தம்பி அவர்களின் அன்பு மனைவியும், நாகரத்தினம், சிவஞானவதி, பாலசுந்தரம், ஈஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், பரமேஸ்வரியின் மாமியாருமாவார்.

அன்னாரது இறுதி விருப்பின் பிரகாரம் பூதவுடல் யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட்டது. உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுசெய்து இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்

[3882]

அரசாங்க அறிக்கையில் தகவல்:

# திருமலைப் பட்டினம் படைகளிடம்; மட்டு., மன்னார் நோக்கி விரைவு

கொழும்பு, ஜூன் 19

திருகோணமலைப் பட்டினம் அரசாங்கப் படைகளின் கட்டுப்பாட்டிற்குள் வந்ததாக அரசாங்கம் நேற்று அறிவித்தது.

மட்டக்களப்பை நோக்கி இராணுவம் முன்னேறிக் கொண்டிருப்பதாகவும், மன்னாரைச் சுற்றிவளைத்து வருவதாகவும் மேலும் அரசு தெரிவித்தது.

வடக்கு - கிழக்கு நிலைமை குறித்து நேற்று மாலை வெளியிடப்பட்ட பாதுகாப்புத் துறையின் அறிக்கையில் மேற்கண்ட தகவல்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன.

அந்த அறிக்கை தெரிவிக்கும் தகவல்கள் சில வருமாறு:-

★ திருகோணமலை நகரம் படைகளின் முழுக் கட்டுப்பாட்டிற்குள் வந்துள்ளது

★ மட்டக்களப்பை நோக்கி இராணுவம் முன்னேறிக் கொண்டிருக்கிறது. புனாணை -வாழைச்சேனை மார்க்கமாக இராணுவத்தினர் முன்னேறிவிட்டனர், மகாஓயா-கிரான் மார்க்கமாக முன்னேறி வருகின்றார்கள். ஆகையால் மட்டக்களப்பு விரைவில் படைகளின் கட்டுப்பாட்டிற்குள் வந்துவிடும்.

★ மன்னாரை நோக்கியும் படைகள் நகர்ந்து வருகின்றன. புத்தளம், சிலாவத்துறைப் பக்கங்களால் இராணுவத்தினர் மன்னாரை நோக்கிச் செல்கிறார்கள்.

★ வடக்கு - கிழக்கில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் முகமாக எடுக்கப்படும் நடவடிக்கைகளின் போது சாதாரண மக்கள் பாதிக்கப்படாமல் இருக்கப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று படைகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது

★ உணவு விநியோகம், மின்சார விநியோகம், மற்றும் தொலைபேசி, தபால் வசதிகள் தடைப்படாமல் நடவடிக்கை எடுக்கவும் பிரதேசப் படை அதிகாரிகளுக்கு முழு அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளது.

★ மல்வத்தை, கிரான், களுவாஞ்சிக்குடி, குச்சவெளி, உப்புவெளி, பழுகாமம், பலாலி, யாழ் கோட்டை ஆகிய இடங்களில் விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்தை மீறித் தாக்குதல்கள் நடத்தி உள்ளனர். (தனித்தனி விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது). (அ)

## இலங்கை வங்கி 2 மணி நேரம் மட்டுமே செயற்படும்

யாழ். நகரில் உள்ள இலங்கை வங்கி கிளைகள் மறு அறிவித்தல் வரை காலை 9 மணி முதல் 11 மணி வரையுமே இயங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது

அந்த நேரத்தில் வாடிக்கையாளர்கள் தமது கருமங்களை மேற்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

## காங்கேசன் பாடசாலைகள் இயங்கும் சாத்தியம் இல்லை

பலாலி, மயிலிட்டி, ஊறணி, தையிட்டி, காங்கேசன்துறைப் பகுதிகளை உள்ளடக்கிய காங்கேசன்துறைக் கல்விக் கொத்தணிப் பகுதியில் உள்ள சகல பாடசாலைகளும் நேற்று இயங்கவில்லை.

இப்பகுதியில் நிலவும் பதற்ற நிலையினாலும், கடந்த வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் ஏற்பட்ட ஹெலி, ஷெல் தாக்குதல்களாலும் பீதியடைந்த கரையோரக் கிராம மக்களின் மிகப் பெரும்பகுதியினர் இடம் பெயர்ந்துள்ளனர்.

இடம் பெயர்ந்தோரில் சுமார் ஐயாயிரத்து ஐநூறு மாணவர்களும் அடங்குகின்றனர். அதனால் 11 பாடசாலைகள் நேற்று இயங்கவில்லை.

இதனால் காங்கேசன் கொத்தணிக்குள் அடங்கும் பாடசாலைகள் எதுவும், தற்போதைய நிலையில இயங்கும் சாத்தியம் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-119)

காங்கேசன் கடலில்

## துறைமுகத்துக்கு வெளியே மா கப்பல் காத்து நிற்கிறது

யாழ்ப்பாணம், ஜூன் 19

காங்கேசன்துறை துறைமுகத்திற்கு மா ஏற்றிக் கொண்டுவந்த கப்பல் ஒன்று துறைமுகத்திற்குள் வர அனுமதி மறுக்கப்பட்டதை அடுத்து, வெளியே கடலில் தரித்து நிற்கிறது.

வடபகுதியின் மா தட்டுப்பாட்டை நீக்க திருமலை பிறிமா ஆலையிலிருந்து ஆயிரத்து 500 மெட்றிக்தொன் மாவுடன் ''சகுறு'' என்ற கப்பல் அவசர அவசரமாக காங்கேசன்துறைக்கு அனுப்பப்பட்டது.

இந்தக் கப்பல் கடந்த ஞாயிற்றுக்கிழமை இங்கு வந்து சேர்ந்தது ஆயினும் கப்பலை துறைமுகத்துக்குள் கொண்டுவந்து இறங்கு துறையுடன் அணைக்க அனுமதி மறுக்கப்பட்டன. அடுத்து கப்பல் துறைமுகத்துக்கு வெளியே தரித்து நிற்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-3-9)

## 50 ஆயிரம் பொதுமக்கள் வலி வடக்கில் இடம்பெயர்வு

### ஒருவார உணவு வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 19

பலாலி, தெல்லிப்பளை, காங்கேசன்துறை, கட்டுவன் குரும்பசிட்டி உட்பட வலி—வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருந்து வெளியேறியவர்களுக்குஒருவாரத்துக்கு போதுமான உணவுப்பொருள்களை நிவாரணமாக வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அந்தப் பிரிவில் இருந்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் வெளியேறி மற்றைய பகுதிகளில் உறவினர்கள் வீடுகளிலும், ஆலயங்களிலும், பாடசாலைகளிலும் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர்.

அவர்களுக்கு ஒரு வாரத்துக்குப் போதுமான உணவுப் பொருள்களை வழங்க வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக யாழ். அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் தெரிவித்தார். (உ-3)

## நயினாதீவில் மீண்டும் கடற்படையினர் சோதனை!

யாழ்ப்பாணம், ஜூன் 19

நயினாதீவுப் பகுதியில் நிலை கொண்டுள்ள கடற்படையினர் மீண்டும் சோதனை நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

நயினாதீவுக்கு பயணம் செய்யும் பயணிகளை கடற்படை முகாம் இறங்குதுறையில் இறக்கி வரிசையாக நிறுத்தி, அடையாள அட்டைகளைப் பார்த்து, பொதிகளை கொட்டி தீவிர சோதனை நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை நயினாதீவு கடற்படை முகாமில் தற்போது கடற்படையினரின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. (உ-9)

## கூட்டுறவுத் தலைவர்கள் கூட்டம்

யாழ். மாவட்டத்திலுள்ள சகலபல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்களுக்குமான கருத்தரங்கு ஒன்று நாளை 20 ஆம் திகதி நண்பகல் 12 மணியளவில் நடைபெற உள்ளது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கோண்டாவில் மாதிரி செயலகத்தில் இந்த கருத்தரங்கு நடைபெற உள்ளது.

இந்த கருத்தரங்கில் சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினது தலைவர்களைக் கலந்து கொள்ளும்படி விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியினர் கேட்டுக் கொண்டுள்ளனர். [உ-9]

சனியன்று நடந்த தாக்குதலில்

## ஊர்காவற்றுறையில் கடைகள், வீடுகள் சேதம்

காரைநகர் கடற்படை முகாமில் இருந்து கடந்த சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல் காரணமாக ஊர்காவற்றுறைப் பகுதியில் உள்ள சில கடைகள், வீடுகள் சேதமடைந்தன. ஷெல் தாக்குதலினால் காயமடைந்த பலரும் ஊர்காவற்றுறை வைத்தியசாலையிலும் மூளாய் வைத்தியசாலையிலும் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இத் தாக்குதலினால் ஊர்காவற்துறையில் உள்ள பழைய இறங்குதுறையும்சேதமடைந்துள்ளது.

இதேவேளை கடற் பகுதியில் இருந்து கடற்படையினர் பீரங்கித் தாக்குதல்களையும் மேற்கொண்டனர்.

பீரங்கித் தாக்குதல் காரணமாக முகாம் பகுதிக்கான மின்சார வயர்கள் அறுந்து சேதமடைந்தன. மின் விநியோகம் பாதிக்கப்பட்டது.

இத்தாக்குதல்களைஅடுத்து ஊர்காவற்றுறை மக்களும் அதனை அண்டிய கரையோரப் பகுதி மக்களும் நாரந்தனை, சரவணை, வேலணை ஆகிய பகுதிகளுக்கு இடம் பெயர்ந்தனர். (இ-10)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்(பிறைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 [illegible] லக்கத்தில் உள்ள [illegible] அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூதூர் தாக்குதலில் பெருமளவு ஆயுதங்கள் மீட்பு

யாழ்ப்பாணம் ஜூன் 19

நேற்று முன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) மூதூர் கிராமம் ஒன்றில் புகுந்து குழப்பம் விளைவித்த ஸ்ரீலங்கா இராணுவத்தின் விசேட அதிரடிப் படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலின்போது பெரும் எண்ணிக்கையான படையினர் கொல்லப்பட்டனர் 11 போராளிகள் மரணமாயினர். பெருமளவு ஆயுதங்கள் புலிகளினால் மீட்கப்பட்டன.

சுமார் 75 பேர் கொண்ட படையினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாயும் -

அவர்களில் மூவர் தப்பி ஓடிவிட்டனர் என்றும் -

எஞ்சியோர் தாக்குதலில் உயிரிழந்தனர் என்றும் விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

சங்கிலி, சுகந்தன், அருண், சீனு, ஜெகன், முருகானந்தன், சலைஞன், தேவா, அன்ரனி, ஜொனி, விநோத் ஆகியோரே வீர மரணமடைந்த போராளிகளாவர்.

பின்வரும் ஆயுதங்கள் மீட்கப்பட்டதாகப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

எம் 203 ரக துப்பாக்கி -10
மேற்படி துப்பாக்கியின் ஷெல் -10
டொங்கன் ஷெல் -4
ஏ கே. எல். எம். ஜி. ரக துப்பாக்கி -4
ரவைகள் -2000
றொக்கற் லோஞ்சர் 4
ரி 81-1 ரக துப்பாக்கி -13
ரி-56-1 ரக துப்பாக்கி -13
ஜி 3 ரக ஸ்னைப்பர் துப்பாக்கி 2
2 அங்குல மோட்டார் -2
ஸ்ராண்ட் மோட்டார் -2
பிஸ்டல் -2
தொலைத் தொடர்புச் சாதனம் -2
நடுத்தர ரக ரவைகள் 2 -

## கோட்டை சிப்பாய்களின் உணவை நாய்கள் உண்டன

யாழ்ப்பாணம், ஜூன் 19

நேற்று முன்தினம்(ஞாயிறு) இரவு யாழ்.கோட்டைப் பகுதியைச் சுற்றி ஹெலிக்கொப்டர், இராணுவத்தினருக்கு உணவுப் பொட்டலங்களைப் போட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். கோட்டைக்குள் போடப்பட்ட இந்தப் பொட்டலங்கள் தவறி கோட்டையை அண்டிய பகுதிகளிலும் விழுந்தன.

நேற்றுக்காலை இந்த உணவுப்பொட்டலங்களை நாய்களும் காகங்களும் உண்பதைப் பலரும் அவதானித்ததாகக் கூறினர். (ஓ-10)

## முழு யுத்தநிலை என்கிறார் ரஞ்சன்

வடக்கு- கிழக்கில் இப்போதுமுழு அளவிலான யுத்த நிலைநிலவுகிறது.

விடுதலைப்புலிகள் இயக்கத்தைத் தோற்கடிப்பதற்கு தேவையான இராணுவ நடவடிக்கைகளை எடுப்பதற்கு இராணுவ தளபதிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இப்படி அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா நேற்று பி பி. சிக்குத் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கும் அரச படைகளுக்கும் கடும் சண்டை நடைபெறுவதைத் தொடர்ந்தே இந்த உத்தரவு வழங்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார். [அ-எ]

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மண்ணில்: 11 - 06 - 1927
விண்ணில்: 20 - 05 - 1990

திருமதி
### சின்னத்துரை சிவபாக்கியம்

எமக்கு வழிகாட்டி ஒளி விளக்காகத் திகழ்ந்த தெய்வமே!

ஒரே நாளில் எம்மையெல்லாம் பிரிந்து எம்மைக் கலங்க வைத்துச் சென்று இன்று 31 நாட்களாகிவிட்டன அன்றும், இன்றும், என்றும் உங்கள் நினைவிலேயே - நீங்கள் காட்டிய நல்வழியிலேயே வாழ்ந்து வருவோம். உங்கள் நினைவுகள் எம் நெஞ்சங்களை விட்டு என்றும் நீங்கா.

அன்னாரின் மரணச்சடங்குகளில் கலந்தும், அனுதாபச் செய்திகளை அனுப்பியும் எமது துக்கத்தில் பங்கு கொண்ட அனைவர்க்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் 19-06-90 செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக அவரது இல்லத்தில் நடைபெறும் இறை வணக்கத்தில் கலந்து இறைவனை இறைஞ்சும் வண்ணமும் மதிய உணவில் பங்கு கொண்டு சிறப்பிக்குமாறும் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

கணவன், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

''தணிகை''
அரசடி வீதி,
வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.
[13512]